வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4379 /ஆ4/2025 நாள்:20.02.2026

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு –மார்ச் –2026 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை (internal marks) இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் தொடர்பான அரசுத் தேர்வுகள் இயக்குநரின் அறிவுரைகள் –பள்ளிகளுக்கு தெரிவித்தல் –சார்பு

பார்வை : 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018412/எச்1/ /2026 நாள் 09.02.2026
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 09.02.2026
3.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018412/எச்1/ /2026 நாள் 20.02.2026

===============

பார்வை 1 –ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தின் படி வேலூர் மாவட்டத்தில் மார்ச் –2026 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களை மதிப்பெண் பட்டியலில் பதிய வேண்டும் என்றும், பின்னர் அம்மதிப்பெண்களை இவ்வலுவலகத்தால் அறிவிக்கப்படும் நாட்களில் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட User ID மற்றும் Password பயன்படுத்தி, www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்குச் சென்று பதிவேற்றம் செய்யவேண்டும் என பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகம் மூலம் அனைத்து மேல்நிலைப்பள்ளிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பார்வை 3 –ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தின் படி அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் அகமதிப்பீட்டு மதிப்பெண்களை இணையதளம் மூலம் 25.02.2026 பிற்பகல் முதல் 07.03.2026 வரையிலான நாட்களில் பதிவேற்றம் செய்யுமாறும், பின்னர் அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்களை வேலூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் அலுவலகத்தில் 10.03.2026 –க்குள் ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பெயர்பட்டியலில் இடம் பெற்றுள்ள தங்கள் பள்ளி மாணவர்கள் அனைவரது அக மதிப்பீட்டு மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். எந்த ஒரு மாணவரது மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்படாமல் இருத்தல் கூடாது எனத் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

//ஒம்.//
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:

அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள் ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர் ( தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.